# சித்தர்கள்

- **‘சித்தர்கள்’** என்பவர்கள் **‘சித்து’** என்னும் பேரறிவினை பெற்றவர்கள். தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் காணப்படும் நிறைமொழி மாந்தர் என்ற சொல்லுக்கும், சிலப்பதிகாரத்தில் நாடு, கான், காதையில் இடம்பெறும் **சித்தன்** என்ற சொல்லுக்கும் உரியவர்கள் சித்தர்கள்.
- அறிவு வேறு ஞானம் வேறு என்று உலகிற்கு விளக்கிய சித்தர்கள் யோகா மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் தங்களின் உயர் நெறிகளாக கொண்டவர்கள். அதனால் அவர்கள் பிறப்பறுத்தவர்கள் எனப்பட்டனர்.
- சித்தர்கள் என்றால் ‘நிறைவடைந்தவர்’ என்பது பொருளாகும். சித்து என்றால் சொல், மனம், கருத்து, ஆன்மா என்பது பொருளாகும்.
- சித்தி என்றால் மெய்யறிதல், காரியம் கைகூடல், வெற்றி என்பது பொருளாகும். சித்தர்களின் நோக்கம் ‘யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக’.
- சித்தர்களில் ஆதி சித்தர் திருமூலர். இவர் கி.பி. ஐந்து அல்லது ஆறாம் நூற்றாண்டை சேர்ந்தவர்.
- சித்தர்களில் கலகக்காரர் சிவவாக்கியர் இவர் ஒன்பதாம் நூற்றாண்டை சேர்ந்தவர்.
- பதினெண் சித்தர்கள் என்பது 18 என்பது, எண்ணிக்கை அல்ல 18 பேருகள் என்று கூறுவாரும் உலர்.
- சித்தர்கள் தங்களின் யோக சாதனையை உள்ளார்ந்த ஆன்மீக ரசவாதம் என்று கருதினார்கள். சித்தர்களை பொறுத்த அளவில் வீடு, பேறு என்பது தன்னை அறிதல்.

**தன்னை அறிந்த நிலையில் ஆன்மா தானே தனக்கு தலைவனாய் நிற்கும்**
**– திருமூலர்**

- சாதி, பேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ ? என்று சிவவாக்கியரும், ‘சாதிப்பிரிவினிலே தீயை மூட்டுவோம்’ என்று பாம்பாட்டி சித்தரும் பாடியுள்ளனர்.
- சித்தர் என்ற சொல்லுக்கு சித்தி பெற்றவர் என்பது பொருளாகும். இயமம், நியமம், ஆடனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி முதலிய எட்டு வகையான யோகங்கள் மூலம் எண்பெரும் சித்திகளை பெற்றவர்கள் சித்தர்கள் ஆவர்.
- **இயமம்** – கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிறர் பொருள் விரும்பாமை, புலனடக்கம் என்பவை ஆகும்.
- **நியமம்** – நியமமாவது நல்லவற்றை செய்து ஒழுக்க நெறி நிற்றலாகும்.
- **ஆசனம்** – உடலை பல்வேறு கோணங்களில் நிறுத்தி பயிற்சி செய்வதாகும்.
- **பிரணாயாமம்** – பிரணாயாமமாவது சுவாசத்தை கட்டுப்படுத்துதல், பிரணா வாயுவை தடுத்தல், வாயுவை உட்செழுத்துதல், வெளி செலுத்துதல் ஆகும்.
- **பிரத்தியாகாரம்** – புலன்கள் வாயிலாக புறத்தே செல்லும் மனதை உள்ளே நிறுத்தி பழகுதல் ஆகும்.
- **தாரணை** – பிரத்தியாக்கார பயிற்சியால் உள்ளே இழுத்த மனத்தை நிலை பெற செய்தல்.
- **தியானம்** – தியானம் என்பது மனதை ஒருமுகப்படுத்தி ஒரே சிந்தையில் ஆழ்தல்.
- **சமாதி** – சமாதி என்பது மனதைக் கடவுளிடம் நிலைக்க செய்வதாகும். அஷ்டமா


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

சித்திகளை கைவிரப் பெற்றவர்கள் சித்தர்கள் ஆவர். இது ‘எண் பெருஞ்சித்திகள்’ எனவும் கூறப்பெறும்.

### அஷ்டமா சித்திகளின் விளக்கம்

| | |
|---|---|
| அனிமா | அணுவைப் போல் சிறிதான தேகத்தை அடைதல் |
| மகிமா | மலையைப் போல் பெரிய தேகத்தை அடைதல் |
| இலகிமா | காற்றை போல் லேசாக மாறுதல் |
| கரிமா | மலைகளாலும் காற்றாலும் அசைக்க முடியாத அளவு கனமாக இருத்தல் |
| பிராப்தி | அனைத்து பொருட்களையும் தன் வயப் படுத்துதல் மனதினால் நினைத்த யாவற்றையும் அடைதல். |
| பிரகாமியம் | தன் உடலை விட்டு பிற உடலில் உட்புகுதல் ( கூடு விட்டு கூடு பாய்தல்) |
| ஈசத்துவம் | நான்முகன் முதலான தேவர்களிடத்தும் தன் ஆணையை செலுத்துதல் |
| வசித்துவம் | அனைத்தையும் தன் வசப்படுத்துதல். |

### சித்தர்களின் இயல்புகள்

- சித்தர்கள் சாமானிய மனிதர்கள் போல் அல்லாமல், தங்களுக்கென்று தனி வாழ்வியல் வழிமுறைகள் உருவாக்கி நாடு, நகரம், மொழி, இனம் என அனைத்தையும் கடந்து இயற்கையோடு இயைந்த வாழ்வினை வாழ்ந்தவர்கள்.
- சித் – அறிவு: சித்தை – (அறிவை) உடையவர்கள் சித்தர்கள்.
- மருத்துவம், யோகம், சோதிடம், மந்திரம், இரசவாதம், வானவியல், புவியியல், அறிவியலையும் தந்தவர்கள் சித்தர்கள்.
- தங்கள் இருப்பை, உடம்பை, சிந்தையை, சுற்றத்தை, இவ்வுலகின் இயல்பை நோக்கி தெளிவான புரிதலை, அறநிலை உணர்வை, மெய்ய அடைதலை சித்தி எய்தல் எனலாம்.

### சித்தர்களின் கொள்கை

- “பரமாத்மா எங்கும் தனியாக இல்லை, நமது உடம்பு தான் பரமாத்மாவின் இடம், ஆதலால் கடவுளைத் தேடி எங்கும் அலைய வேண்டாம். உடம்பின் உள்ளேயே பரமாத்மாவை கண்டு உணரு” என்பதாகும்.

### பிரிவுகள்

- **சன்மார்க்க சித்தர்கள் -** திருமூலர், போகர்
- **ஞான சித்தர்கள்** –பட்டினத்தார் பத்திரகிரியார், சிவவாக்கியர், பாம்பாட்டி சித்தர், பேய் சித்தர், குதம்பைச் சித்தர், அழுகணி சித்தர், இடைக்காடனார்.
- **காய சித்தர்கள் –** கோரக்கர், கருவூர் சித்தர் மச்சமுனி சட்ட முனி சுந்தர ஆனந்தர் உரோம ரிஷி

### சித்தர்களின் கூற்றுகள்

“உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே”
“உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்”

**–திருமூலர்**

- சித்தர்கள் நாடிகளை பிடித்து நோய் அறியும் திறன் பெற்றிருந்தனர். இயற்கையில் இருந்து மருந்துகள் தயாரிக்கும் கூறுகளையும் அறிந்திருந்தனர்.
- சித்தர்களின் பாடல்கள் யோகம் தந்திரம் மருத்துவம் என்ற மூன்று கூறுகளையும் அறிந்தவர்களால் மட்டுமே பொருள் காணத்தக்க வகையில் குழூஉக் குறிகளாக அமைந்திருந்தன மாங்காய் பால் என்பது
- குண்டலினி சக்தியை உச்சியில் ஏற்றி, அமுதம் உண்ணும் நிலையை கூறும் சொல்லாகும்.


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

| பதினெண் சித்தர்கள் | | இதர சித்தர்கள் முக்கியமானவர்கள் | |
|---|---|---|---|
| 1. | அகத்தியர் | அகத்தியர் | நாரதர் |
| 2. | திருமூலர் | அகப்பேய் சித்தர் | பட்டினத்தார் |
| 3. | இராமதேவர் | அருணகிரிநாதர் | பத்திரகிரியார் |
| 4. | கும்பமுனி | அழுகுணி சித்தர் | பரமகுரு சுவாமிகள் |
| 5. | இடைக்காடர் | ரமண மகரிஷி | பரமஹம்சர் |
| 6. | தன்வந்திரி | ராமகிருஷ்ணர் | பாம்பன் சுவாமிகள் |
| 7. | வால்மீகி | ராமலிங்க சுவாமிகள் | புலிப்பாணி சித்தர் |
| 8. | கமலமுனி | உரோம ரிஷி | மார்க் கண்டேயர் |
| 9. | போகர் | கடுவெளி சித்தர் | மௌனசாமி சித்தர் |
| 10. | மச்சமுனி | கருவூரார் | |
| 11. | கொங்கனர் | காரை சித்தர் | |
| 12. | பதஞ்சலி | ஏனாதி சித்தர் | |
| 13. | நந்தி தேவர் | காலங்கிநாதர் | |
| 14. | பாம்பாட்டி சித்தர் | சுந்தரானந்தர் | |
| 15. | சட்டை முனி | சிவவாக்கியர் | |
| 16. | குதம்பை சித்தர் | சிறு தொண்ட நாயனார் | |
| 17. | கோரக்கர் | சுந்தரர் | |
| 18. | இடைக் காடர் | தேரையர் | |

"தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே - ஒரு
தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே
நாதர் முடி மேலிருக்கும் வெண்ணிலாவே - அங்கே
நானும் வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே"
**– வள்ளலார்**

## சித்தர்கள் ஜீவ சமாதி

| | | |
|---|---|---|
| 1. | அகத்தியர் | திருவனந்தபுரம் |
| 2. | கொங்கனர் | திருப்பதி |
| 3. | சுந்தரனார் | மதுரை |
| 4. | கருவூரார் | கரூர் |
| 5. | திருமூலர் | சிதம்பரம் |
| 6. | தன்வந்திரி | வைத்தீஸ்வரன் கோயில் |
| 7. | கோரக்கர் | பொய்யூர் |
| 8. | குதம்பைச் சித்தர் | மாயவரம் |
| 9. | இடைக்காடர் | திருவண்ணாமலை |
| 10. | ராம தேவர் | அழகர் மலை |
| 11. | கமலமுனி | திருவாரூர் |
| 12. | சட்ட முனி | திருவரங்கம் |
| 13. | வான்மீகர் | எட்டக்குடி |
| 14. | நந்தி தேவர் | காசி |
| 15. | பாம்பாட்டி சித்தர் | சங்கரன்கோவில் |
| 16. | மச்சமுனி | திருப்பரங்குன்றம் |
| 17. | போகர் | பழனி |
| 18. | பதஞ்சலி | ராமேஸ்வரம் |

| |
|---|
| "மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" "எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தார் **அகத்திய ஞானம்** |
| அப்பா யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்" **பாரதியார்** |
| "ஒன்றே குலம் ஒருவனே தேவனும்" **திருமூலர்** |
| "ஒன்றென்று இரு தெய்வம் உண்டென்று இரு" **பட்டினத்தார்** |
| "நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்" **திருமூலர்** |
| "ஞானத்தின் மிக்க அறநெறி நாட்டில்லை" **திருமூலர்** |
| "நாடொணாத அமிர்தம் உண்டு நான் அழிந்த நின்ற நான்" **சிவவாக்கியர்** |
| "ஆதி கபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே சாதி வகை இல்லாமல் சஞ்சரிப்பது எக்காலம்" **பத்திரகிரியார்** |
| "நந்தவ னத்திலோர் ஆண்டி - அவன் நாளாறு மாதமாய் குயவனை வேண்டி கொண்டு வந்தான் ஒரு தோண்டி அதை கூத்தாடி கூத்தாடி போட்டு உடைத் தாண்டி" **கடுவெளி சித்தர்** |

www.tnpscgroup4.in